Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 191 | உள்ளூர் - 10.07.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 191 | வெளியூர் - 11.07.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**ஆடி மாத ராசிபலன்கள்: 12 ராசிகளுக்கும்!**

**டிஎன்பிஎஸ்சி தொழில்நுட்பப் பணி; 839 காலியிடங்கள்!**

**திருப்பதி / திருச்செந்தூர் பக்தர்களுக்கு முக்கிய அறிவிப்பு?**

**வட மாநிலங்களில் கொட்டித்தீர்க்கும் கனமழை!**

## சென்னைக்கு வரும் பிக் பாஷ் லீக் போட்டி: மெல்போர்ன் மைதானத்தில் பிரதமர் மோடி அதிரடி அறிவிப்பு!

மெல்போர்ன், ஜூலை. 10–

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அங்குள்ள புகழ்பெற்ற மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்திற்கு நேரில் சென்றார். இந்த வருகையின் போது, இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையிலான விளையாட்டுத் தூதரக உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து முக்கிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.




அப்போது, ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற உள்நாட்டு டி20 தொடரான 'பிக் பாஷ் லீக்' (BBL) போட்டியின் தொடக்க ஆட்டம் இந்தியாவின் சென்னையில் உள்ள சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை பிரதமர் மோடி வெளியிட்டார். வெளிநாட்டு கிரிக்கெட் லீக் போட்டி ஒன்று இந்தியாவில் நடப்பது இதுவே முதல்முறையாகும். இந்த நிகழ்வின் போது, ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் ஸ்டீவ் வாஹ் பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேசினார்.

டிசம்பர் 12ம் தேதி பிற்பகல் 2:40 மணிக்கு, சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் முதல் BBL போட்டியில் மெல்போர்ன் ரெனிகேட்ஸ்–பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.

## கரூர் மக்கள் சந்திப்பு: முதல்வர் விஜய் ஆவேசம்!

கரூர், ஜூலை. 10–

கரூர் மக்கள் சந்திப்பு கூட்டத்தில் என் மனதின் ஆறாத காயம் கரூர் சம்பவம் என்று பேச்சைய தொடங்கிய முதலமைச்சர் விஜய் கடந்த தி.மு.க. ஆட்சி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

நிகழ்ச்சியில் முதலமைச்சர் விஜய் பேசியதாவது:–



* கரூர் சம்பவம் யார் சொல்லி நடந்தது தெரியுமா?
* கரூர் சம்பவத்தின் போது காவல்துறை தகுந்த பாதுகாப்பு கொடுத்ததா?
* நமக்காக வந்துள்ள மக்களை காக்க வைத்து ஆதாயம் தேடுபவன் நான் அல்ல.
* எனக்காக எல்லாவற்றையும் கொடுத்த மக்களுக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்தவன் நான்.
* என்னை ஏளனமாக பேசுகிறீர்கள், ஓடி ஒளிந்துவிட்டார் என என்னைப் பார்த்து பேசினர். வாய் என்று ஒன்று இருப்பதற்காக என்ன வேண்டுமென்றாலும் பேசுவீங்களா?
* ஒவ்வொரு துறையிலும் தீயசக்தியும், தீர்ந்துபோன சக்தியும் சேர்ந்து பார்ட்டி ஃபண்ட் வாங்கியுள்ளனர். பார்ட்டி பண்டு என்றுதான் சட்டமன்றத்தில் சொன்னேன். எந்த கட்சி எனச்சொல்லவி ல்லை.
* சென்னையில் பாலம் கட்ட வழக்கமான செலவைவிட இருமடங்கு செலவில் ஒப்பந்தம் விட்டுள்ளனர். அதையெல்லாம் தோண்டி எடுத்து ரத்து செய்தோம். இன்னும் எத்தனை வருமென்று தெரியவில்லை.
* விஜய் ஒவ்வொரு கதையாக எடுத்து வெளியே விடுவார் போல என கதறல் கதறல் என திரும்பும் பக்கமெல்லாம் கதறல்.
* அரசு அலுவலகங்களில் ஒரு பைசா லஞ்சம் இல்லை, ஒரு பைசா ஊழல் இல்லை. அரசு அலுவலகங்களில் வேலைகள் விரைவாக நடப்பதாக மக்கள் பெருமையுடன் பேசுகின்றனர்.
* எல்&டி நிறுவனத்துடன் ரூ.18ஆயிரம் கோடி மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.
* தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் அண்ணா பிறந்தநாள் அன்று தொடங்க உள்ளது. தீயசக்திபோல் ரீல் தாய்மாமன் எல்லாம் இல்லை. நான் ரியல் தாய்மாமன்.
* தீயசக்தியின் நிர்வாகம் பற்றிய வெள்ளை அறிக்கையை அண்மையில் வெளியிட்டோம். நிதித்துறை குறித்த வெள்ளை அறிக்கையை பற்றி சுருக்கமாக ஒரு உதாரணம் சொல்கிறேன்.
* ஓட்டை பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றியுள்ளனர். தண்ணீர் எங்கே போனது என தெரியவில்லை.
* நான் பேசவில்லை என்றால் வாயத் திறங்க CM என பேட்ஜ் குத்திக்கொண்டு வருகின்றனர்.
* நான் பேசினால் விஜய்க்கு அரசியல் பேசத் தெரியவில்லை என சொல்வார்கள்.
* நான் 5 நிமிடம் பேசியதற்கே கொளத்தூரில் கொத்து பரோட்டா போடப்பட்டுள்ளது.
* மேகதாது அணை வழக்கில் தமிழ்நாட்டு மனுவை உச்சநீதிமன்றம் எப்போது ரத்து செய்தது? அப்போது ஆட்சியில் இருந்தது யார்? ஏன் சரியாக வாதாடவில்லை?
* சட்டமன்றத்தில் அரசினர் தீர்மானம் கொண்டு வந்தோம். எப்படி கொண்டு போக வேண்டுமோ அதை செய்வோம்.
* எங்களுக்குள் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என நிரூபிக்க முடியுமா? இடைத்தேர்தலில் நிரூபியுங்கள், பிறகு பேசுங்கள்.
* பேசுவதை விட செயலில் காட்ட வேண்டும். 'டாக் லெஸ், ஒர்க் மோர்' என்பதே நமது அரசியல் என்றார்.




கரூரில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திலிருந்து சாலை மார்க்கமாக கரூர் செல்லும் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்க்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## சமூக நீதித்துறையின் புதிய கண்காணிப்புக் குழு... தலைவராக முதல்வர் விஜய்!

சென்னை, ஜூலை. 10–

முதலமைச்சர் விஜய் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகளைத் தடுக்கும் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை மறுசீரமைத்து புதிய அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.



இந்த குழுவில் முதலமைச்சர், அமைச்சர்கள், எம்பிக்கள், எம்எல்ஏக்கள் என மொத்தம் 54 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். குழு உறுப்பினர்களாக நிதித்துறை அமைச்சர் மரிய வில்சன், சமூகநீதித்துறை அமைச்சர் வன்னி அரசு இடம்பெற்றுள்ளனர்.

மேலும் ராஜ்மோகன், விஸ்வநாதன், காந்திராஜ் உள்ளிட்ட 7 பட்டியலின அமைச்சர்களும் இடம்பெற்றுள்ளனர். அதேப்போல பட்டியலின பிரிவைச் சேர்ந்த விசிக தலைவர் திருமாவளவன், சசிகாந்த் செந்தில், ஆ.ராசா உள்ளிட்ட 8 எம்.பி.க்கள், 37 எம்எல்ஏக்களும் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைச் சம்பவங்களை தடுப்பதற்கும், சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்துவதற்கும் இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழு முக்கிய பங்காற்றும்.

மேலும் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் உரிய நீதி மற்றும் நிவாரணங்கள் கிடைப்பதை உறுதி செய்யும்.

### செயற்கை கருத்தரிப்பு மையங்களுக்கு செக்...!

## பதிவு இல்லாத IVF மையங்களுக்கு 'ரெட் சிக்னல்' மருத்துவப் பொருட்கள் வழங்க புதிய நிபந்தனை

### சட்டவிரோத செயல்களுக்கு முட்டுக்கட்டை!!

புதுடெல்லி, ஜூலை. 10–

செயற்கை கருத்தரிப்பு (IVF/ART) சிகிச்சை மையங்களில் வெளிப்படைத்தன்மை, தரம் மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் மத்திய அரசு புதிய கட்டுப்பாடுகளை அமல்படுத்தியுள்ளது. இதன்படி, பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகாரம் பெற்ற செயற்கை கருத்தரிப்பு (ART) மையங்கள் மற்றும் வங்கிகளுக்கு மட்டுமே IVF சிகிச்சைக்கு தேவையான ஆய்வக திரவங்கள் (IVF Media), ரீஏஜென்ட்கள், கரு பாதுகாப்பு (Cryopreservation) பொருட்கள் உள்ளிட்ட முக்கிய மருத்துவப் பொருட்களை உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் வழங்க வேண்டும் என மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) உத்தரவிட்டுள்ளது.




இதுவரை பதிவு செய்யப்படாத சில மையங்களுக்கும் இந்த மருத்துவப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதாக புகார்கள் எழுந்த நிலையில், அவற்றைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இனி பொருட்களை வழங்குவதற்கு முன், அந்த மையம் ART சட்டம் மற்றும் வாடகைத் தாய் (Surro–gacy) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உற்பத்தியாளர்கள் கட்டாயமாக சரிபார்க்க வேண்டும்.

புதிய நடைமுறையால் பதிவு இல்லாத கருத்தரிப்பு மையங்கள் செயல்படுவது கடினமாகும். அதே நேரத்தில், சிகிச்சை பெறும் தம்பதியரின் பாதுகாப்பு, தரமான மருத்துவ சேவை மற்றும் சட்டவிரோத செயற்கை கருத்தரிப்பு நடைமுறைகளை கட்டுப்படுத்துவதில் இது முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது. விதிமுறைகளை மீறி மருத்துவப் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய அரசு எச்சரித்துள்ளது.



## தலையங்கம்

மதுரை மணி

வெள்ளிக்கிழமை 10.07.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆனி மாதம் 26-ம் தேதி

## உயிரைக் காக்கும் கயிறு... வாழ்வைக் காக்கும் அரசு எங்கே?



தூத்துக்குடி என்றாலே முத்தும் சங்கும் நினைவுக்கு வரும். உலகப் புகழ்பெற்ற முத்துக்குளித்தல் மற்றும் சங்கு குளித்தல் தொழில், இன்று கூட பல குடும்பங்களின் வாழ்வாதாரமாகத் தொடர்கிறது. ஆனால் அந்த வாழ்வாதாரம், ஒவ்வொரு நாளும் உயிருடன் நடத்தப்படும் போராட்டமாகவே உள்ளது.


கடலின் ஆழத்தில் சங்கு சேகரிக்கும் தொழிலாளர்கள், அலைகளையும் ஆபத்துகளையும் எதிர்கொண்டு பணியாற்றுகின்றனர். நவீன உலகம் விண்வெளியை எட்டியிருக்கிறது; ஆனால் கடலுக்குள் இறங்கும் இந்தத் தொழிலாளர்களுக்கு அடிப்படை பாதுகாப்பு உபகரணங்கள் கூட இன்னும் முழுமையாக கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரியது.

இந்தத் தொழிலின் மிக உருக்கமான மரபு, கடலுக்குள் இறங்கும் தொழிலாளரின் இடுப்பில் கட்டப்படும் கயிற்றின் மறுமுனையை அவரது மச்சான் பிடித்திருப்பதுதான். "அது என் சகோதரியின் தாலிக் கயிறு" என்ற உணர்வோடு அந்தக் கயிற்றை பிடித்திருப்பார் என்ற நம்பிக்கை, இந்தத் தொழிலின் மனிதநேய முகத்தைக் காட்டுகிறது. அது வெறும் கயிறல்ல; ஒரு குடும்பத்தின் நம்பிக்கை, ஒரு மனைவியின் வாழ்க்கை, ஒரு குழந்தையின் எதிர்காலம்.

ஆனால் உணர்வுகள் மட்டும் உயிரைக் காப்பாற்றாது. பாதுகாப்பான ஸ்கூபா கருவிகள், உயிர்காப்பு சாதனங்கள், மருத்துவக் காப்பீடு, விபத்து இழப்பீடு, ஓய்வூதியத் திட்டம் போன்ற அடிப்படை பாதுகாப்புகளை அரசு உறுதி செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

நூற்றாண்டுகள் பழமையான இந்த பாரம்பரியத் தொழிலை பாதுகாப்பதும், அதில் ஈடுபடும் தொழிலாளர்களின் உயிரை மதிப்பதும் நம் சமூகத்தின் பொறுப்பு. கடலுக்குள் இறங்கும் ஒவ்வொரு தொழிலாளரும் பாதுகாப்பாக வீடு திரும்புவதே உண்மையான வளர்ச்சி.


தாலிக் கயிற்றின் நம்பிக்கையை மட்டுமே நம்பாமல், அரசின் பாதுகாப்புக் கரமும் அவர்களைத் தாங்கும் நாளே இந்தத் தொழிலுக்கு கிடைக்கும் மிகப் பெரிய மரியாதையாகும்.



மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க்கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முதலாம் ஆண்டு மாணவர்களும், பெற்றோர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

## கீழக்கரை நகர்மன்ற கூட்டம்: புதிய மீன் மார்க்கெட் அமைக்க வலியுறுத்தல்!





ராமநாதபுரம், ஜூலை. 10–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகர்மன்றக் கூட்டத்தில், இடிக்கப்பட்ட பழைய மீன் மார்க்கெட் இடத்தில் புதிய கட்டிடம் அமைக்கும் பணியை உடனடியாக தொடங்க வேண்டும் என உறுப்பினர்கள் வலியுறுத்தினர். புதிய கட்டிடம் அமையும் வரை தற்காலிக மீன் கடைகள் அமைக்க பலமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அதிருப்தி தெரிவித்தனர்.

தற்போது தனியார் மீன் மார்க்கெட் செயல்படுவதால் புதிய பேருந்து நிலையம் அருகே போக்குவரத்து நெரிசல் மற்றும் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுவதாக கூறிய அவர்கள், உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகை யிடப் போவதாக எச்சரித்தனர்.

மேலும், சாலை வசதி, தெருவிளக்குகள், குப்பை அகற்றுதல், கால்வாய் மூடுதல், பாதாள சாக்கடைப் பணிகளை விரைந்து முடித்தல் மற்றும் பணிகளை தாமதப்படுத்தும் ஒப்பந்ததாரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

## வாட்ஸ் அப் டிக்கெட் செல்லாது... ரயில்வே புதிய எச்சரிக்கை!




சென்னை, ஜூலை. 10–

முன்பதிவு செய்யப்படாத (Unreserved) ரயில் டிக்கெட்டுகளை சரிபார்ப்பதில் இந்திய ரயில்வே புதிய விதிமுறைகளை அமல்படுத்தியுள்ளது. இனி வாட்ஸ் அப், ஸ்கிரீன்ஷாட், புகைப்படம் அல்லது PDF வடிவில் டிக்கெட்டை காட்டினால் அது செல்லுபடியாகாது என அறிவிக்கப்பட்டுள்ளது. பயணிகள் RailOne உள்ளிட்ட அதிகாரப்பூர்வ ரயில்வே செயலியில் உள்ள அசல் (Original Digital Tick–et) டிக்கெட்டையே டிக்கெட் பரிசோதகரிடம் காண்பிக்க வேண்டும். டிக்கெட் பதிவு செய்யப்பட்ட அதே மொபைல் எண் மற்றும் அதே செயலியில் டிக்கெட் இருக்க வேண்டும். மற்றொருவர் அனுப்பிய ஸ்கிரீன்ஷாட் அல்லது ஃபார்வர்டு செய்யப்பட்ட டிக்கெட் ஏற்கப்படாது. இந்த விதியை மீறுவோர் முறையான டிக்கெட் இல்லாதவர்களாகக் கருதப்பட்டு, ரயில்வே விதிகளின்படி ரூ.500 முதல் அபராதம் விதிக்கப்படும். ஒரே டிக்கெட்டை பலருக்கு பகிர்வது, போலி ஸ்கிரீன்ஷாட்கள் மூலம் மோசடி செய்வது போன்றவற்றைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது. இந்த புதிய விதி தற்போது முன்பதிவு செய்யப்படாத (Unreserved) டிக்கெட்டுகளுக்கு மட்டுமே பொருந்தும். இருப்பினும் ஸ்மார்ட்போன் பயன்படுத்தத் தெரியாத முதியோர் உள்ளிட்ட சில பயணிகளுக்கு இந்த நடைமுறை சிரமத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற கவலையும் எழுந்துள்ளது.

## கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த புதிய முயற்சி.. சபரிமலையில் ஏ.ஐ. தொழில்நுட்பம்..!




திருவனந்தபுரம், ஜூலை. 10–

சபரிமலையில் நடப்பு மண்டல, மகர விளக்கு சீசன் வருகிற நவம்பர் மாதம் தொடங்க இருக்கும் நிலையில் மந்திரி முரளீதரன் தலைமையில் திருவனந்தபுரத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பிறகு மந்திரி முரளீதரன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:–

மண்டல மகரவிளக்கு சீசன் தொடங்க இன்னும் 4 மாதங்கள் உள்ளன. எனவே தரிசனத்திற்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களின் அடிப்படை வசதிகளை திறம்பட மேம்படுத்தி செயல்படுத்த அந்தந்த துறை அதிகாரிகளுக்கு இப்போதே உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் நடந்த தவறு, இந்த ஆண்டு நடைபெறாத வகையில் செயல்படுவது உறுதி செய்யப்படும்.

சீசனில் பக்தர்களின் கூட்ட நெரிசல் மிகப்பெரிய பிரச்சினையாக ஒவ்வொரு ஆண்டும் இருந்து வருகிறது. இந்த ஆண்டு ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கூட்ட நெரிசல் கட்டுப்படுத்தப்படும். அனைத்து பக்தர்களுக்கும் சபரிமலை தரிசனம் உறுதி செய்யப்படும். சீசனுக்கு முன்னதாக முதல்–மந்திரி தலைமையில் தென் மாநில மந்திரிகளின் கூட்டம் நடைபெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ரேஷன் கடையில் தரமான அரிசி வழங்க புதிய நடைமுறை!



புதுடெல்லி, ஜூலை. 10–

இந்திய உணவுக் கழகத்தின் மத்திய சேமிப்புக் கிடங்குகளில் முன்னெப்போதும் இல்லாத அளவில் 122.64 மில்லியன் டன் உணவுத்தானியங்கள் கையிருப்பில் உள்ளன. இதில் 53.41 மில்லியன் டன் கோதுமை, 0.9 மில்லியன் டன் சிறுதானியங்கள் மற்றும் 42.84 மில்லியன் டன் நெல் உள்பட மொத்தம் 68.34 மில்லியன் டன் அரிசி அடங்கும்.

இந்த அரிசி ஒவ்வொரு மாநிலத்திற்கும் வழங்கப்பட்டு, ரேஷன் கடைகள் மூலம் வினியோகம் செய்யப்படுகிறது. அதன்படி, இந்த அரிசியின் தரத்தை உயர்த்தும் நோக்கில், மத்திய அரசு புதிய முக்கிய முடிவு ஒன்றை எடுத்துள்ளது. அதாவது, ரேஷன் அரிசியில் உடைந்த அரிசியின் (குருணை) அளவைக் கணிசமாகக் குறைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக 'ஆர்.எம்.டி' என்ற புதிய திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் பொருளாதார விவகாரக்குழு தனது அதிகாரப்பூர்வ ஒப்புதலை வழங்கியுள்ளது.

மத்திய அரசின் இந்த புதிய விதிமுறைகளின்படி, ரேஷன் கடைகளுக்கு வரும் அரிசியில் குருணையின் அளவு பெருமளவு குறைந்து, அதன் தரம் நன்றாக இருக்கும். பச்சை அரிசியில் இதுவரை 25 சதவீதமாக இருந்த உடைந்த அரிசியின் அளவு, இனி 10 சதவீதமாகக் குறைக்கப்படும். புழுங்கல் அரிசியில் இதுவரை 16 சதவீதமாக இருந்த உடைந்த அரிசியின் அளவு, இனி 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

முன்னதாக இந்த திட்டம், ஆந்திராவில் சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக அங்குள்ள ஆலைகளில் நெல் அரைக்கும்போது கிடைக்கும் உடைந்த அரிசி, அரிசி ஆலைகளிடமே ஒப்படைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஆலைகளுக்கு அரசு சார்பில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இந்த வெற்றிகரமான முறையைத் தழுவியே தற்போது நாடு தழுவிய அளவில் புதிய திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் 100 கிலோ நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசியில் குருணையின் அளவு குறைக்கப்பட்டு, உயர்தர முழு அரிசி பொது மக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

## த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க ரூ.35 கோடி பேரமா? சிங்கப்பூர் தொழில் அதிபரை வலைவீசி தேடும் போலீஸ்!




சென்னை, ஜூலை. 10–

த.வெ.க. அரசை கவிழ்க்கும் நோக்கில் ஊத்தங்கரை எம்.எல்.ஏ. டாக்டர் என். இளையராஜாவுக்கு ரூ.35 கோடி பேரம் பேசப்பட்டதாகக் கூறப்படும் வழக்கில் விசாரணை தீவிரமடைந்துள்ளது. இந்த வழக்கில் ஏற்கனவே பலர் கைது செய்யப்பட்ட நிலையில், சிங்கப்பூரைச் சேர்ந்த தொழில் அதிபர் லட்சுமண பெருமாள் முக்கிய குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையில், சிங்கப்பூரில் இருந்து தொலைபேசி மற்றும் இணைய வழியாக பேரப் பேச்சுவார்த்தைகளை ஒருங்கிணைத்ததுடன், நட்சத்திர ஓட்டல்களில் நடந்த சந்திப்புகள் தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் மற்றும் வாட்ஸ்அப் தகவல்களை அழிக்க முயன்றதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதையடுத்து அவருக்கு எதிராக லுக்–அவுட் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டு, இந்தியா வரும்போது கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் வி. செந்தில்பாலாஜி மற்றும் அவரது சகோதரர் வி. அசோக் குமார் ஆகியோரின் பெயர்களும் விசாரணையில் இடம்பெற்றுள்ள நிலையில், வழக்கின் பின்னணி குறித்து போலீசார் தொடர்ந்து ஆதாரங்களை சேகரித்து வருகின்றனர். இந்த விவகாரம் தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சதுரகிரிக்கு பக்தர்களுக்கு 4 நாட்கள் அனுமதி!



சென்னை, ஜூலை. 10–

ஆனி அமாவாசையை முன்னிட்டு விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவிலுக்கு பக்தர்கள் மலையேறிச் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஜூலை 12 முதல் 15 வரை நான்கு நாட்கள்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியை வனத்துறை, கோவில் நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து அறிவித்துள்ளன.

பக்தர்கள் தினமும் காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை மட்டுமே மலையேற அனுமதிக்கப்படுவார்கள். ஜூலை 15 அன்று மட்டும் காலை 6 மணி முதல் 10 மணி வரை அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்களை மலையில் எடுத்துச் செல்ல அனுமதி இல்லை. மேலும், அனுமதிக்கப்பட்ட நாட்களில் கனமழை அல்லது மோசமான வானிலை நிலவினால், பக்தர்களின் பாதுகாப்பு கருதி மலையேற்றம் தற்காலிகமாக நிறுத்தப்படலாம் என்றும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

## காடுகளில் மின் பரிமாற்றப் பாதைகள்: புதிய வழிகாட்டுதல்கள் வெளியீடு!



சென்னை, ஜூலை. 10–

காடு பகுதிகளில் உயர் மின்னழுத்த மின் பரிமாற்றப் பாதைகள் அமைப்பதற்கான புதிய வழிகாட்டுதல்களை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்டுள்ளது. புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி Right of Way (RoW) எனப்படும் நிலப்பரப்பு தேவையை அதிகபட்சமாக 20 சதவீதம் வரை குறைக்கமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட மின் கோபுரங்கள், குறைந்த அடித்தள பரப்பளவு மற்றும் நவீன மின் கம்பி வடிவமைப்புகள் மூலம் காடு பகுதிகளில் மரவெட்டும், சுற்றுச்சூழல் பாதிப்பும் கணிசமாக குறையும் என்று அமைச்சகம் விளக்கியுள்ளது.

இந்த மாற்றம், மத்திய மின்சார ஆணையத்தின் (CEA) 2025–ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட தொழில்நுட்ப தரநிலைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜூலை 3–ஆம் தேதி அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இதுகுறித்து சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்ப கோபுரங்கள் அமைக்கப்படும் திட்டங்களுக்கு மட்டுமே புதிய RoW விதிமுறைகள் பொருந்தும்; பழைய வடிவமைப்பில் மேற்கொள்ளப்படும் மின் பரிமாற்றத் திட்டங்களுக்கு தற்போதைய விதிமுறைகள் தொடரும். எதிர்காலத்தில் புதிய தொழில்நுட்பங்கள் முழுமையாக அமல்படுத்தப்பட்ட பிறகு, பழைய RoW விதிமுறைகள் படிப்படியாக நீக்கப்பட்டு புதிய தரநிலைகள் முழுமையாக நடைமுறைக்கு வரும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.



## ஆடி மாத ராசிபலன்கள்: 2026 (12 ராசிகளுக்கும்)

2026 ஆம் ஆண்டில் ஆடி மாதம் ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 17 வரை நடைபெறுகிறது. இந்த மாதம் ஆன்மிகம், வழிபாடு, குடும்ப நலன் மற்றும் புதிய தொடக்கங்களுக்கான உள்மனத் தயாரிப்பிற்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

**மேஷம்**

தொழிலில் புதிய வாய்ப்புகள் உருவாகும்.
வருமானம் உயரும்; செலவுகளை கட்டுப்படுத்தவும்.
குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.
உடல்நலத்தில் கவனம் அவசியம்.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு

**ரிஷபம்**

பணவரவு சீராக இருக்கும்.
நிலம், வீடு தொடர்பான நல்ல செய்திகள் கிடைக்கும்.
தம்பதியரிடையே ஒற்றுமை அதிகரிக்கும்.
தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்கவும்.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி
அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை

**மிதுனம்**

வேலைப்பளு அதிகரிக்கும்.
மாணவர்களுக்கு சிறந்த முன்னேற்றம்.
நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும்.
பயணங்களில் கவனம் தேவை.
அதிர்ஷ்ட நாள்: புதன்
அதிர்ஷ்ட நிறம்: பச்சை

**கடகம்**

சூரியன் உங்கள் ராசியில் இருப்பதால் தன்னம்பிக்கை உயரும்.
பதவி உயர்வு வாய்ப்பு உள்ளது.
குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறலாம்.
உடல்நலத்தை அலட்சியம் செய்ய வேண்டாம்.
அதிர்ஷ்ட நாள்: திங்கள்
அதிர்ஷ்ட நிறம்: வெள்ளி

**சிம்மம்**

செலவுகள் அதிகரித்தாலும் வருமானம் சமாளிக்கும்.
வெளிநாட்டு வாய்ப்புகள் உருவாகலாம்.
ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும்.
புதிய முதலீடுகளில் அவசரம் வேண்டாம்.
அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு
அதிர்ஷ்ட நிறம்: தங்க மஞ்சள்

**கன்னி**

நண்பர்கள் மூலம் முன்னேற்றம்.
தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.
குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.
உடற்பயிற்சி அவசியம்.
அதிர்ஷ்ட நாள்: புதன்
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை

**துலாம்**

தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி.
மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.
குடும்பத்தில் அமைதி நிலவும்.
கடன் சுமை குறையும்.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி
அதிர்ஷ்ட நிறம்: நீலம்

**விருச்சிகம்**

தடைபட்ட காரியங்கள் நிறைவேறும்.
திடீர் பணவரவு கிடைக்கலாம்.
நீண்ட பயண வாய்ப்பு உள்ளது.
கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள்.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்
அதிர்ஷ்ட நிறம்: அடர் சிவப்பு

**தனுசு**

பண விஷயங்களில் எச்சரிக்கை தேவை.
புதிய முதலீடுகளை ஆராய்ந்து செய்யவும்.
மாணவர்களுக்கு வெற்றி.
குடும்ப ஆதரவு கிடைக்கும்.
அதிர்ஷ்ட நாள்: வியாழன்
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள்

**மகரம்**

கூட்டுத் தொழிலில் லாபம் கிடைக்கும்.
திருமண பேச்சுகள் முன்னேறும்.
பணவரவு அதிகரிக்கும்.
உடல்நலத்தில் சிறு கவனம் தேவை.
அதிர்ஷ்ட நாள்: சனி
அதிர்ஷ்ட நிறம்: கருநீலம்

**கும்பம்**

வேலை மாற்றம் விரும்புவோருக்கு நல்ல காலம்.
வருமானம் உயரும்.
குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்படும்.
எதிரிகளை வெல்வீர்கள்.
அதிர்ஷ்ட நாள்: சனி
அதிர்ஷ்ட நிறம்: ஊதா

**மீனம்**

குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி.
கலை, இலக்கியத் துறையினருக்கு பாராட்டு கிடைக்கும்.
காதல் விவகாரங்களில் நல்ல முன்னேற்றம்.
புதிய முயற்சிகள் வெற்றி பெறும்.
அதிர்ஷ்ட நாள்: வியாழன்
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள்


ஆடி மாத பரிகாரம் (அனைத்து ராசிகளுக்கும்):

ஆடி வெள்ளிக்கிழமைகளில் அம்மன் வழிபாடு செய்யுங்கள்.

ஆடி செவ்வாயில் துர்க்கை அம்மனை தரிசிப்பது நல்ல பலன் தரும்.

ஏழைகளுக்கு அன்னதானம் அல்லது ஆடை தானம் செய்வது சிறப்பான யோகம் தரும்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## ஆண்கள் தவறாமல் செய்ய வேண்டிய 5 முக்கிய மருத்துவ பரிசோதனைகள்!




வருடாந்திர முழு உடல் பரிசோதனை உடல்நிலை, இதயம், நுரையீரல், இரத்த அழுத்தம் உள்ளிட்டவற்றை மதிப்பீடு செய்ய.

கொலஸ்ட்ரால் & லிப்பிட் சுயவிவர சோதனை இதய நோய், பக்கவாத அபாயத்தை முன்கூட்டியே கண்டறிய.

இரத்த அழுத்த பரிசோதனை உயர் ரத்த அழுத்தத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய.

பெருங்குடல் புற்றுநோய் பரிசோதனை 50 வயதுக்கு மேற்பட்டோர் அல்லது குடும்ப வரலாறு உள்ளவர்கள் அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

புரோஸ்டேட் புற்றுநோய் பரிசோதனை 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு முக்கியமான ஸ்கிரீனிங்.

**சுருக்கம்:**

வழக்கமான மருத்துவ பரிசோதனைகள் பல்வேறு நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, சிகிச்சையை எளிதாக்கி, ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்ய உதவுகின்றன.

# சினிமா துளிகள்..!

## 24 ஆண்டுகளுக்கு பிறகு 'A' சான்றிதழ்; ஜூலை 24-ல் 'ஜனநாயகன்' ரிலீஸ்!




ஹெச். வினோத் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெக்டே உள்ளிட்டோர் நடித்துள்ள 'ஜனநாயகன்' திரைப்படத்திற்கு நீண்ட தாமதத்திற்குப் பிறகு தணிக்கை வாரியம் 'A' சான்றிதழ் வழங்கியுள்ளது. 2002–ல் வெளியான 'பகவதி'படத்திற்குப் பிறகு, 24 ஆண்டுகள் கழித்து விஜய் நடித்த படம் ஒன்று 'A' சான்றிதழ் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. சென்சார் தாமதத்தால் படத்தின் வெளியீடு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், தற்போது சான்றிதழ் கிடைத்ததால் ஜூலை 24–ம் தேதி உலகம் முழுவதும் படத்தை வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது. படத்தின் ஓட்ட நேரம் 183 நிமிடங்கள் (3 மணி 3 நிமிடங்கள்) ஆகும். எந்த காட்சிகள் நீக்கப்பட்டன என்பது குறித்து அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகவில்லை.

விஜய்க்கு குடும்ப ரசிகர்கள் மற்றும் சிறுவர்கள் அதிகம் இருப்பதால், 'A' சான்றிதழ் வசூலில் தாக்கத்தை ஏற்படுத்துமா?என்ற கேள்வி திரையுலகில் எழுந்துள்ளது. இருப்பினும், படத்தின் அதிகாரப்பூர்வ ரிலீஸ் அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'கன்வென்ஷன் சென்டர்' ஆனது ஏவிஎம்மின் படப்பிடிப்பு தளம்!




இந்தியாவின் பாரம்பரிய திரைப்பட தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்று ஏவிஎம் 80 ஆண்டுகளில், 6 மொழிகளில் 179 படங்களைத் தயாரித்துள்ள இந்நிறுவனத்தில் 6 முதல்வர்கள் பணியாற்றி இருக்கிறார்கள். இந்நிலையில் புகழ்பெற்ற இந்நிறுவனத்தின் ஒரு படப்பிடிப்பு தளம், 'ஏவிஎம் கன்வென்ஷன் சென்டர்' ஆக மாற்றப்பட்டுள்ளது. இதன் அறிமுக விழாவில், ஏவிஎம் பாலசுப்பிரமணியன், ஏவிஎம் சரவணனின் மகன் குகன், அருணா குகன், இயக்குநர்கள் எஸ்.பி.முத்துராமன், வி.சி.குகநாதன், நடிகர் மோகன் ராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பிரபல ஒளிப்பதிவாளர் செழியன் காலமானார்



பிரபல ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான செழியன், உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார். தரமணியில் உள்ள தனியார் புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரி ழந்தார். கல்லூரி, பரதேசி, தென்மேற்கு பருவக்காற்று, தாரை தப்பட்டை உள்ளிட்ட பல திரைப்படங்களில் ஒளிப்பதிவாளராக பணியாற்றி தமிழ் திரையுலகில் தனித்துவமான முத்திரை பதித்தவர்.

# 75 ஆண்டுகளுக்கு பின் மிக கொடூரமான எல் நினோ!




வாஷிங்டன், ஜூலை 10–

பசிபிக் பெருங்கடலில் உருவான எல் நினோ கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத மிக வலிமையான நிகழ்வாக இருக்க கூடும் என அமெரிக்க காலநிலை முன்னறிவிப்பு மையம் எச்சரித்து உள்ளது. இந்த ஆண்டு உருவாகியுள்ள எல் நினோ, கடந்த 1950–ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட மிக வலுவான வரலாற்றுச் சிறப்புமிக்க "சூப்பர் எல் நினோ" (Super El Nino) நிகழ்வுகளில் ஒன்றாக மாறக்கூடும்.

தொடர்ந்து வலுப்பெற்று வரும் எல் நினோ இந்தாண்டு இறுதிக்குள் மேலும் தீவிரமடையும் என்றும், 2027–ஆம் ஆண்டின் முற்பகுதி வரை நீடிப்பதற்கு 97% வாய்ப்புள்ளதாகவும் அமெரிக்க காலநிலை முன்னறிவிப்பு மையம் தகவல் தெரிவித்து உள்ளது.

இந்த நிகழ்வின் முக்கிய அடையாளமான, இயல்பை விட 1 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கும் அதிகமான கடல் மேற்பரப்பு வெப்பநிலை, மத்திய மற்றும் கிழக்கு பூமத்திய ரேகை பசிபிக் பகுதி முழுவதும் பரவியுள்ளதாகவும் அமெரிக்க மையம் கூறி இருக்கிறது. மிகவும் தீவிரமான 'எல் நினோ' நிகழ்வுகள் கூட எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. சமீபத்திய எல் நினோ நிகழ்வு, இந்தியாவில் பருவமழை பாதிப்புகளையும், வறட்சியையும் மற்றும் அமெரிக்காவில் கடுமையான மழைப்பொழிவையும் ஏற்படுத்த கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட மிக அதிவேகமாக அதிகரித்து வருகிறது. சிலகணிப்புகளின்படி, இந்த வெப்பநிலை இயல்பை விட 3°C வரை அதிகரிக்க கூடும். இதனால் 2026 மற்றும் 2027 ஆகிய ஆண்டுகள் பூமியின் மிக வெப்பமான ஆண்டுகளாக மாறி, புதிய உலக வெப்ப சாதனை படைக்கலாம் எனவும் நிபுணர்கள் அச்சம் தெரிவித்து உள்ளனர்.

# பெற்றோரை கவனிக்காவிட்டால் சொத்தை திரும்ப பெறலாம் - ஐகோர்ட்!



மும்பை, ஜூலை. 10

பிள்ளைகள் பெற்றோரை கவனிக்காவிட்டால் எழுதித் தந்த சொத்தை திரும்ப பெறலாம் என மும்பை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. பெற்றோரின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் சொத்து மாற்றம், நிபந்தனைகள் மீறப்பட்டால் சொத்து மாற்றத்தை தாராளமாக செல்லாததாக அறிவிக்கலாம் என்று மும்பை ஐகோர்ட் தெரிவித்துள்ளது.



பணியாற்றும் ஆசிரியர்களின் பணியை பறிக்கும், பதவி உயர்வை மறுக்கும் கட்டாய ஆசிரியர் தகுதித்தேர்வினை கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இராசிபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# 2023-ல் விவாகரத்து, 2026-ல் இயக்குனருடன் 2-வது திருமணம் செய்த 'சுப்பிரமணியபுரம்' நடிகை!



'சுப்பிரமணியபுரம்' படத்தின் மூலம் பிரபலமான நடிகை சுவாதி ரெட்டி, இயக்குநர் ஸ்ரீகாந்த் நகோதியை இரண்டாவது திருமணம் செய்து கொண்டுள்ளார். கடந்த 2023–ல் முதல் கணவருடன் விவாகரத்து பெற்ற அவர், ஜூலை 8, 2026 அன்று குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் முன்னிலையில் எளிமையாக திருமணம் செய்து கொண்டார். திருமண புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் "Hitched. 08–07–2026" என்ற ஒரே வரியுடன் பகிர்ந்து கணவரை அறிமுகப்படுத்தினார். 'மந்த் ஆஃப் மது' திரைப்படத்தில் இணைந்து பணியாற்றியபோது ஏற்பட்ட நட்பு பின்னர் காதலாக மலர்ந்து திருமணத்தில் முடிந்ததாக கூறப்படுகிறது.

**முக்கிய அம்சங்கள்:**

2023–ல் முதல் திருமணம் விவாகரத்தில் முடிந்தது.

2026 ஜூலை 8–ல் இயக்குநர் ஸ்ரீகாந்த் நகோதியை திருமணம் செய்தார்.

திருமணம் எளிமையாக குடும்பத்தினர் முன்னிலையில் நடைபெற்றது.

இன்ஸ்டாகிராமில் திருமணத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

'சுப்பிரமணியபுரம்', 'இதற்கு தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா', 'யச்சன்' உள்ளிட்ட படங்களில் நடித்தவர்.

# தனியார் பஸ் உரிமையாளர்கள் வேலைநிறுத்தம்!



கேரளம், ஜூலை. 10–

கேரளத்தில் சாதாரண அரசு பஸ்களில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் பிரியதர்ஷினி திட்டத்தை கடந்த மாதம் 15–ந் தேதி முதல்–மந்திரி வி.டி.சதீசன் தொடங்கி வைத்தார். இதன் மூலம் பெண்கள் பயனடைந்து வருகின்றனர். இந்த திட்டத்தால் தனியார் பஸ்களில் பயணிகள் கூட்டம் குறைந்து, வருவாய் இழப்பு ஏற்பட்டு வருவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் கூறி வந்தனர். எனவே, இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தனியார் பஸ்கள் நஷ்டத்தில் இயங்குவதை தடுக்க கோரியும் பாலக்காடு–கோபாலபுரம் வழித்தடத்தில் இயக்கப்படும் தனியார் பஸ்கள் அனைத்தையும் இன்று (வெள்ளிக்கிழமை) இயக்காமல் பஸ் உரிமையாளர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பயணிகள் அவதி அடைந்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறும்போது, இந்த வழித்தடத்தில் தினமும் 10 நிமிட இடைவெளியில் 25–க்கும் மேற்பட்ட அரசு பஸ்கள் இயக்கப்படுகிறது. இந்த பஸ்களில் பெண்கள் இலவசமாக பயணம் செய்வதால், தனியார் பஸ்களில் பயணிகள் எண்ணிக்கை குறைந்து உள்ளது. இதனால் டீசல் நிரப்ப மற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை உள்ளது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றனர்.

# ஏலகிரி சுற்றுலா மேம்பாட்டுக்கு 10 கோரிக்கைகள்!



ஜோலார்பேட்டை, ஜூலை.10–

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் நடைபெற்ற ஓட்டல் உரிமையாளர்கள் சங்கக் கூட்டத்தில், சுற்றுலா வளர்ச்சிக்காக தமிழக அரசுக்கு 10 முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. சங்கத் தலைவர் பீட்டர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், ஏலகிரியில் 150–க்கும் மேற்பட்ட ஓட்டல்கள், 200–க்கும் மேற்பட்ட கெஸ்ட் ஹவுஸ்கள் இயங்கி வருவதாகவும், வாரந்தோறும் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகை தருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படகு இல்லத்தைச் சுற்றி நடைபாதை, 24 மணி நேர மருத்துவ சேவை, மினி ஆம்புலன்ஸ், மினி பேருந்து, சாலை மேம்பாடு, சுற்றுலா வரைபடத்தில் ஏலகிரியை சேர்த்தல், ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் வந்தே பாரத் ரயில் நின்று செல்ல ஏற்பாடு, பொன்னேரியில் அரசு பேருந்துகள் நிறுத்தம், சென்னை ஏலகிரி நேரடி அரசு பேருந்து மற்றும் ஆண்டுதோறும் கோடை விழா நடத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என சங்கத்தினர் வலியுறுத்தினர்.

## ஏறுமுகத்தில் தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 10–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 உயர்ந்து ரூ.1,06,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ரூ.13,350–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.245–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# கரூர் பலி குடும்பங்களுக்கு தற்காலிக பணி மட்டும்!



மதுரை, ஜூலை. 10–

கூட்ட நெரிசலில் சிக்கி இறந்த 32 பேர் குடும்பத்துக்கு கரூரில் இன்று நடைபெறும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், முதல்–அமைச்சர் விஜய் அரசு பணி ஆணை வழங்குகிறார். இதற்கிடையில், கரூர் சம்பவத்தில் இறந்தவர்கள் குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்க தடைகோரி மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப்பணி வழங்குவதாக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டதா?. கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பொருளாதார உதவி தேவைதானே? அரசு பணி வழங்குவதில் என்ன தவறு? என அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பினர். மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல், "கருணை அடிப்படையில் பணி வழங்கினால் சாட்சிகளை கலைக்கும் வாய்ப்பாக அமையும். ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு, தர்மபுரி பஸ் எரிப்பு சம்பவங்களில் இறந்தோர் குடும்பத்திற்கு இழப்பீடு தரவில்லை; அரசுப் பணி வழங்கப்படவில்லை என வாதிட்டார்.

அனைத்து வாதங்களும் நிறைவடைந்ததையடுத்து நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர். அதன்படி, கரூர் கூட்ட நெரிசலில் இறந்தோர் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்குவதற்கு தடையில்லை; வழங்கப்படும் பணி நியமன ஆணை தற்காலிகமானதாகவே இருக்க வேண்டும். ஆனால், அந்த பணியின் நிரந்தரதன்மை நீதிமன்ற தீர்ப்புக்கு உட்பட்டது எனக் கூறிய நீதிபதிகள் அரசுப்பணி வழங்குவதற்கு எதிரான வழக்கில் டி.என்.பி.எஸ்.சியை எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவிட்டு வழக்கு வரும் 21–ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# வேலை வாய்ப்பு

## ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு (டிப்ளமோ / ஐ.டி.ஐ. நிலை): 2026

**முக்கிய விவரங்கள்**

| விவரம் | தகவல் |
|---|---|
| நிறுவனத்தின் பெயர்: | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) |
| விளம்பர எண்: | 737 |
| அறிவிப்பு எண்: | 06 / 2026 |
| அறிவிப்பு வெளியான தேதி: | 07.07.2026 |
| வேலைவாய்ப்பு வகை | தமிழ்நாடு அரசு நிரந்தர பணி |
| பணியிடங்கள் | ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு (டிப்ளமோ / ஐ.டி.ஐ. நிலை) |
| மொத்த காலிப்பணியிடங்கள்: | 839 |
| பணியிடம்: | தமிழ்நாடு முழுவதும் |
| ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கும் நாள் | 17.07.2026 |
| விண்ணப்பிக்க கடைசி நாள்: | 15.08.2026 இரவு 11.59 மணி வரை |
| விண்ணப்பிக்கும் முறை | ஆன்லைன் (Online) |
| அதிகாரப்பூர்வ இணையதளம்: | TNPSC அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.tnpsc.gov.in/ |

# திருப்பதி பக்தர்களே உஷார்.. இந்த தேதிகளில் தரிசனம் ரத்து..!



திருப்பதி, ஜூலை. 10–

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் \ பக்தர்களுக்காக தேவஸ்தானம் சார்பில் ஒரு முக்கிய அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் இம்மாதம் 17ஆம் தேதி ஆணிவாரா ஆஸ்தானம் நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு 14ஆம் தேதி கோவிலை கழுவி சுத்தம் செய்யும் கோவில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெறும்.

எனவே இம்மாதம் 14, 17 ஆகிய தேதிகளில் மிக முக்கிய பிரமுகர்கள் தவிர மற்றவர்களுக்கு விஐபி பிரேக் தரிசன அனுமதி கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

17ஆம் தேதி ஆணிவார ஆஸ்தான நாள் அன்று கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, கட்டண பிரம்மோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவை ஆகிய சேவைகள் நடைபெறாது என்றும் தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது.

# திருச்செந்தூர் பக்தர்களுக்கு அதிரடி உத்தரவு...!




திருச்செந்தூர், ஜூலை. 10–

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் தரிசன மற்றும் பல்வேறு சேவைகளுக்கான கட்டணங்களை உயர்த்துவது தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் கருத்து களைப் பெறும் நடைமுறையில், ஆட்சேபனைகள் மற்றும் கருத்துகளை தெரிவிக்க வழங்கப்பட்டிருந்த காலக்கெடு ஜூலை 21–ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு பிறப்பித்துள்ளது. இது கட்டண உயர்வை உடனடியாக அமல்படுத்தும் உத்தரவு அல்ல கட்டண உயர்வு தொடர்பாக பொது மக்களின் கருத்துகளை பதிவு செய்ய கூடுதல் அவகாசம் வழங்கும் நடவடிக்கையாகும்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## வெனிசுலா நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3889 ஆக உயர்வு!



வெனிசுலா, ஜூலை. 10–

இரண்டு வாரங்களுக்கு முன்பு வெனிசுலாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த இரட்டை நிலநடுக்கங்களால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3,889 ஆக உயர்ந்துள்ளது. இது அந்நாடு வெளியிட்ட அரசாங்க அறிக்கை தெரிவித்தது. ஜூன் 24 அன்று ஏற்பட்ட 7.2 மற்றும் 7.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கங்களில் கிட்டத்தட்ட 17,000 பேர் காயமடைந்தனர், அதே நேரத்தில் மேலும் கிட்டத்தட்ட 18,000 பேர் தங்கள் வீடுகளை இழந்தனர்.

ஜார்ஜ் ரோட்ரிக்ஸ் டெலிகிராமில் பதிவிட்ட அறிக்கையின்படி, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,811–லிருந்து 3,889– ஆக உயர்ந்தது. பேரிடரை சமாளிக்க நாட்டிற்கு உதவுவதற்காக, வெளிநாடுகளில் முடக்கப்பட்டுள்ள வெனிசுலா நிதியை விடுவிக்க வேண்டும் என இடைக்காலத் தலைவர் டெல்சி ரோட்ரிக்ஸ் புதன்கிழமை அழைப்பு விடுத்தார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா மனுக்களை பெற்றுக்கொண்டு குறைகளை கேட்டறிந்தார்.

## ரூ.716 கோடி பரிசுத்தொகை... பாரீஸில் பிரமாண்டமாக தொடங்கிய Esports உலகக்கோப்பை!





சென்னை, ஜூலை. 10–

வீடியோ கேம்களும் முறையான விளையாட்டு தான் என அனைவரும் ஏற்றுக்கொள்ளும் காலம் மெல்ல உருவாகி வருகிறது.

Esports என அழைக்கப்படும் இவற்றுக்கு முறையான தளமும் உருவாக்கம் கண்டு வருகிறது. இதில் குறிப்பாக இவ்வாறான வீரர்களுக்கு வாய்ப்பளிக்க உருவான மிகப்பெரும் களம் தான் Es–ports உலகக்கோப்பை.

உலகின் மிகப்பெரிய ஆன்லைன் விளையாட்டுத் திருவிழாவாக இத்தொடர் பரிணமித்துள்ளது.

இதன் முதலாவது சர்வதேச தொடர் நேற்று பிரான்ஸ் தலைநகர் பாரீசில் உள்ள Paris Expo Porte de Ver–sailles வளாகத்தில் கோலாகலமாக தொடங்கியது.

ஆகஸ்ட் 23ஆம் தேதி வரை மொத்தம் 7 வாரங்களுக்கு இந்தத் தொடர் நடைபெறவுள்து.

இந்த தொடரில் உலக சாதனையாக 75 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.716 கோடி) பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள 100க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 2,000க்கும் மேற்பட்ட Elite வீரர்கள் மற்றும் 200 முன்னணி Esports கிளப்புகள் இதில் பங்கேற்கின்றனர்.

உலகின் மிகவும் பிரபலமான 24 ஆன்லைன் கேம்களை உள்ளடக்கி மொத்தம் 25 தொடர்களாக இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஏற்கனவே 1.5 மில்லியனுக்கும் அதிகமான வீரர்கள் பங்கேற்ற 330 தகுதிச்சுற்றுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வென்றவர்கள் தற்போது பாரிஸுக்கு நேரில் வந்து தொடரின் அடுத்தகட்ட போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

## சிங்கப்பெண் அதிரடிப்படைக்கு சென்னையில் தலைமை அலுவலகம்!





சென்னை, ஜூலை. 10–

தமிழ்நாட்டின் முதல்–அமைச்சராக விஜய் பதவியேற்றபோது, பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்படும் என்ற கோப்பில் கையெழுத்திட்டார். இதைத்தொடர்ந்து ஐ.ஜி. பவானீஸ்வரி தலைமையில் இந்த படை பிரிவு உருவாக்கப்பட்டது. கடந்த மாதம் 9–ந்தேதி இந்த பிரிவை முதல்–அமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார். இந்த படைப்பிரிவு தொடங்கிய ஒரு மாதத்தில் மெச்சத்தகுந்த பணிகளையும், பல்வேறு அதிரடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில், சிங்கப்பெண் அதிரடிப்படை பிரிவு தொடங்கிய ஒரு மாதம் ஆகி உள்ள நிலையில் தமிழகம் முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட 120 பேர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. காணாமல் போன 36 குழந்தைகள் மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். 16 குழந்தை திருமணங்கள் தக்க நேரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படைக்கு என்று தனியாக கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு பரபரப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

1091 என்ற அவசர உதவி எண் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த எண்ணிற்கு ஒரு நாளைக்கு சுமார் 1500க்கும் மேற்பட்ட அழைப்புகள் வருகின்றன சிங்கப்பெண் அதிரடி படைக்காக சென்னை அசோக் நகரில் தலைமை அலுவலகம் தொடங்கப்பட உள்ளது. மாநிலம் முழுவதும் செயல்படும் 70 சிங்கப்பெண் அதிரடிப்படைகளில் புதிதாக 2,545 பேர் தேர்வு செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சென்னை மெட்ரோ ரெயில்: விதிகளை மீறுபவர்களுக்கு அபராதத் தொகை ரூ.2,500 ஆக அதிகரிப்பு!



சென்னை, ஜூலை. 10–

சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:– சென்னை மெட்ரோ ரெயில் பயண ஒழுங்குமுறைகள்: விதிகளை மீறி மற்றவர்களுக்கு இடையூறு செய்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

மெட்ரோ ரெயில் பயண ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி, சக பயணிகளின் வசதிக்கும் அமைதிக்கும் மதிப்பளிக்குமாறு அனைத்துப் பயணிகளையும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

மெட்ரோ ரெயில் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) சட்டம் 2002 பிரிவு 59–ன் கீழ், சக பயணிகளுக்குத் தொந்தரவு விளைவிப்பதோ அல்லது அவர்களின் வசதிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படுவதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

**ஹெட்போன் இன்றி இசை**

**குறிப்பாக:**

அலைபேசியில் உரத்த குரலில் உரையாடுதல்;

செவியில் பொருத்தி கொள்ளும் ஒலிபெருக்கி (Headphones) இன்றி இசை அல்லது வீடியோக்களை பார்ப்பது;

அலைபேசியில் மெட்ரோ ரெயில்களிலும் வளாகங்களிலும் ஒலிபெருக்கி வசதியைப் பயன்படுத்துதல் (Speaker mode);

மேற்கண்ட செயல்கள் மூலம் அதிகப்படியான இரைச்சலை ஏற்படுத்தும் வகையில் அலைபேசிகளைப் பயன்படுத்துவதும் மற்றவர்களுக்கு இடையூறு விளைவிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.

மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் (MoHUA) 19.06.2026 அன்றுவெளியிட்ட அரசிதழ் (Gazette) அறிவிப்பின்படி, 'ஜன் விஸ்வாஸ் சட்டம் 2026'–இன் கீழ் ஒரு புதிய திருத்தம்கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்படி, மெட்ரோ ரெயில் மற்றும் அதன் வளாகங்களில் மற்ற பயணிகளுக்குஇடையூறு விளைவிக்கும் செயல்களில் (உதாரணமாக: செவியில் பொருத்தி கொள்ளும் ஒலிபெருக்கிஇல்லாமல் உரத்த சத்தத்தில் பாட்டு கேட்பது போன்றவைகளில்) ஈடுபடுபவர்களுக்கான அபராத தொகை, பிரிவு 59–இன் கீழ், முன்பிருந்த ரூ.500–லிருந்து தற்போது அதிகபட்சமாக ரூ.2,500 வரைஉயர்த்தப்பட்டுள்ளது.

**ஸ்பீக்கர் மோட் பயன்பாடு**

மேலும், விதிகளை மீறும் பயணிகள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் மெட்ரோ வளாகத்திலிருந்து உடனடியாக வெளியேற்றப்படவும் வாய்ப்புள்ளது.

எனவே, சக பயணிகளின் பயண சூழலைக் கருத்தில் கொண்டு, அனைவரும் செவியில் பொருத்திகொள்ளும் ஒலிபெருக்கியை (Headphones) பயன்படுத்துமாறும், மெட்ரோ ரெயில் மற்றும் அதன் வளாகத்திற்குள் உரத்த குரலில் உரையாடுதல் மற்றும் ஸ்பீக்கர் மோட் பயன்பாட்டைத் தவிர்க்குமாறும்சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட மாநிலங்களில் கொட்டித்தீர்க்கும் கனமழை!



புதுடெல்லி, ஜூலை. 10–

தென் மேற்கு பருவமழை தீவிரமடை ந்ததை அடுத்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. கேரளா மட்டும் அல்லாமல் வட மாநிலங்களான குஜராத், மராட்டியம், காஷ்மீரில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தது. அதை தொடர்ந்து தற்போது டெல்லி, உத்தரபிரதேசம், திரிபுரா உள்ளிட்ட மாநிலங்களிலும் பெய்து வருகிறது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படையினர் மேற்கொண்டு வருகின்றனர். தலைநகர் டெல்லியில் இரவு முதல் விடிய விடிய கனமழை பெய்ததை அடுத்து பல இடங்கள் வெள்ளத்தில் மிதக்கிறது. இதனால்,சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. டெல்லிக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்த இந்திய வானிலை ஆய்வு மையம், இடியுடன் கூடிய கனமழை பெய்யும் என்றும், மின்னல் தாக்கக்கூடும் எனவும் எச்சரித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் டெல்லியின் மயூரி விஹாரில் 10 செ.மீ., லோதி சாலை யில் 8 செ.மீ., சப்தர்ஜங் பகுதியில் 7.26 செ.மீ. மழை பாதிவானது. ரோஹினியில் நான்கு மாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்தனர். டெல்லிக்கு அருகில் உள்ள அரியானாவின் குருகிராம் நகரிலும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**சூரத்தில் வெள்ளப்பெருக்கு**

குஜராத் மாநிலம் சூரத் நகரில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக 9 பேர் உயிரிழந்தனர். தாழ்வான பகுதிகளில் வசிக்கும் ஆயி ரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். வெள்ளத்தால் சூழப்பட்ட உயரமான கட்டிடங்களில் சிக்கியிருந்த மக்க ளுக்கு உணவுபொட்டலங்கள் வினியோகிக்கப்பட்டன. மழை தொடர்ந்து பெய்து வருவதால் நகரின் பல பகுதிகள் இன்னும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

**வயநாட்டில் தொடரும் மீட்புப்பணி**

கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவ்வப் போது மழை பெய்து வருவதால் மீட்பு பணிகளில் தொய்வு ஏற்பட்டுள் ளது.கேரளா மாநிலம் மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு மாவட்டங்களில் ஆரஞ்சு எச்சரிக்கையும், எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர், பாலக்காடு, கண்ணூர், காசர்கோடு மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

**காஷ்மீர், ராஜஸ்தான்**

காஷ்மீரின் தோடா மாவட்டத்தின் சில பகுதிகளில் பெய்த திடீர் கனமழை காரணமாக பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதையடுத்து, அங்கு அவசரகால மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ராஜஸ்தானிலும் தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. கோட்டா மாவட்டத்தில் உள்ள ராம்கஞ்ச் மண்டி பகுதியில் அதிகபட்சமாக 10 செ.மீ. மழை பதிவானது. அடுத்த 3 நாட்களில் பல மாவட்டங்களில் மேலும் கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச் சரித்துள்ளது.

**உத்தரகாண்ட்**

உத்தரகண்ட் மாநிலம் ருத்ரபிரயாக் பகுதியில் பெய்த கனமழையை தொடர்ந்து அலக்நந்தா ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் அதன் கரையில் உள்ள சிவபெருமானின் சிலை பாதி மூழ்கிய நிலையில் காணப்படுகிறது. அலக்நந்தா, மந்தாகினி ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் மாவட்ட நிர்வாகம் உஷார்படுத்தப்பட்டு உள்ளது. உத்தரகாசியில் பெய்த பலத்த மழையால் நலுபானிக்கு அருகே நிலச்ச ரிவு ஏற்பட்டது. இதன் காரணமாக கங்கோத்ரி தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கற்கள், மண், பாறைகளை அகற்றும் பணிகள் நடைபெற்றன.

## சென்னை, புதுக்கோட்டையில் அமலாக்கத்துறை சோதனை!




சென்னை, ஜூலை. 10–

சென்னையில் தொழிலதிபர் குளோபல் மார்க்கெட்டிங் உரிமையாளர் நசீர் என்பவரது வீட்டில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள வீட்டில் 6 அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். டிராவல்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி வரும் ஆஸ்மி என்பவர் வீட்டிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். ராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலையில் உள்ள ஆஸ்மி வீட்டில் அமலாக்கத்துறை அதிகாரிகள் தற்போது சோதனை நடத்தி வருகின்றனர்.

இதைபோன்று புதுக்கோட்டையில் தொழில் அதிபர்கள் 3 பேர் வீடுகளில் அமலாக்கத்துறை சோதனை நடத்தி வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் திமுக நிர்வாகி செல்லையாவின் மகன் திருக்குமரன். இவர் வெல்டிங் பட்டறை நடத்தி வருகிறார். அதேபோன்று தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தில் இறால் பண்ணை வைத்து நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் சட்ட விரோத பண பரிமாற்ற சட்டத்தின் கீழ், இவரது வீட்டில் ஏழு பேர் கொண்ட இரண்டு அமலாக்கத்துறை குழுக்கள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதேபோன்று கோட்டைப்பட்டினம் பயாஸ் என்பவர் திருச்சியில் டிராவல்ஸ் ஏஜென்சியை வைத்து நடத்தி வருகிறார். இவரது வீட்டிலும் 6 அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை ஈடுபட்டு வருகின்றனர்.

இதேபோன்று புதுக்கோட்டை பெருங்களூர் சேர்ந்த பாக்யராஜ். இவர் எண்ணெய் ஆலை நடத்தி வருகிறார். இவரது வீட்டிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை ஈடுபட்டு வருகின்றனர். மூன்று இடங்களிலும் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ படையினர் உதவியோடு அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். சட்ட விரோதமாக பணம் பரிமாற்றம் தொடர்பாக இந்த சோதனை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுரை மெஜூரா காலேஜ் நிர்வாக குழு உறுப்பினராக ராஜு பட்டர் தேர்வு!



மதுரை, ஜூலை. 10–

மதுரை மெஜூரா காலேஜ் நிர்வாக குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, போர்ட் மெம்பராக பணியை தொடங்கும் நமது நண்பர் சிவஸ்ரீ.ராஜு@சங்கரன்பட்டர் அவர்களை வாழ்த்துகிறோம். அவரது இப்பணி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருவருளால் சிறந்து விளங்கி நமது சமூகத்திற்கு நன்மைகளை வழங்கட்டும் என்று அம்மையப்பரிடம் பிரார்த்தனை செய்கிறோம்.

எத்தனையோ பேர் மெஜூரா காலேஜில் படித்து பட்டதாரியாகி நமது சமூகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர் என்றாலும் முதன்முறையாக நமது ஆதிசைவர் சமூகத்தை சேர்ந்த ராஜு பட்டருக்கு நிர்வாக குழு உறுப்பினர் பதவி கிடைத்தது அவருக்கு மட்டுமின்றி நமது சமூகத்திற்கும் கிடைத்த பெரிய கௌரவமாகவும் அங்கீகாரமாகவும் அமைந்துள்ளது. பாராட்டுக்கள். வாழ்த்துக்கள் அன்புடன்,

இரா.சாமிநாதபட்டர்.மதுரை




மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க்கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முதலாம் ஆண்டுமாணவர்களும், பெற்றோர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020